# இலங்கை வங்கி

**இலங்கையின் 1ஆம் தர வங்கியுடன் இணைந்து வெற்றிகரமான தொழில்வாய்ப்பொன்றை உருவாக்குங்கள்!**

வங்கித் துறையில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக்கொள்ள விரும்பும் தகைமையும் இளமைத் துடிப்பும் சாதிக்க வேண்டும் என்ற ஓர்மமும் கொண்ட நபர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பயிலுநர் பதவிநிலை உதவியாளர்

### தகுதிப் பிரமாணங்கள்

- **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- **தகைமைகள்**

  க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் தாய் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்களைத் தவிர்த்து)

  **மற்றும்**

  க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் (பொது ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் பொதுத் தகவல் தொழில்நுட்பம் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- **ஏனைய திறன்கள்**
  - மற்றவர்களுடன் பழகும், தொடர்பாடும் திறன்களைக் கொண்டிருத்தல்.
  - அர்ப்பணிப்பையும், விடாமுயற்சியினையும் வெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல்.
  - நேர வரையறைகளுக்குட்பட்டு செயற்படும் திறனைக் கொண்டிருத்தல்.
- **வயது**

  விண்ணப்ப முடிவுத் திகதியில் 24 அல்லது அதற்குக் குறைந்த வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

### விதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகள் என்பதோடு அப்பயிற்சிக் காலப்பகுதிக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக 1ஆம் வருடம் 55,000/- ரூபாயும் 2ஆம் வருடம் 70,000/- ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவியானது சாதாரண வங்கிச் சேவைக்கு உட்பட்டது (திறந்த சேவை) என்பதுடன் வங்கிச் சேவையின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- வங்கி திருப்தியடையும் வகையில் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தவுடன் பதவிநிலை உதவியாளர் - I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- சாதாரண வங்கி வேலை நேரத்திற்கு அப்பாலும் வார இறுதி நாட்கள் / விடுமுறை நாட்களிலும் பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வங்கியின் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டாலே ஒழிய, பயிலுநர் பணிக்கமர்த்தப்படும் மாகாணத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் (பயிற்சிக் காலம் உட்பட) கட்டாயம் பணியாற்ற வேண்டும்.

### தெரிவு நடைமுறை

- போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- அந்தந்த மாகாணங்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.
- பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்கள் கருத்திற்கொள்ளப்படும்

  வினாத்தாள் I - பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

  வினாத்தாள் II - ஆங்கில மொழி
- போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்ய மட்டுமே பயன்படுத்தப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலேயே இறுதித் தெரிவு இடம்பெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

- எமது இணையதளமான **www.boc.lk** (Careers என்ற பகுதியின் கீழ்) ஊடாக **2025.05.24ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் "விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை" உங்களது எதிர்காலத் தொடர்புக்காக வைத்திருக்கவும்.
- மேற்படி வங்கி இணையதளத்தின் *Careers* என்ற பகுதியில் காணப்படும் 'விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்களை' கவனமாக வாசித்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இணையவழி விண்ணப்பத்தை நிரப்பவும்.
- விண்ணப்பதாரிகள் தமது விருப்புக்குரிய மாகாணமாக ஒன்றை மட்டுமே தேர்வு செய்ய முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களை தெரிவுசெய்யுமிடத்து அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சான்றிதழ் உறுதிப்படுத்தலின்போது மேலே கோரப்பட்ட தகுதிப் பிரமாணங்களுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பதாரி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வங்கியின் வலைத்தளத்தின் 'மனித வள முகாமைத்துவ' பக்கத்தில் *(https://www.boc.lk/hr-management)* உள்ள 'ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்' பகுதியை வாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மனித வளப் பிரிவு,**
**இலங்கை வங்கி,**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு 01.**

- *தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.*

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்